1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No.434/2021

24.02.2026 வா.சா. 1 திரு. கனகராஜ்

(2069 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பிராது தபசில் சொத்தின் பட்டா பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான், வழக்கு நிலுவையில் இருந்தபோது மாற்றப்பட்டது. என் பெயரில் பி.வா.சா.ஆ. 6 ஆவணம் கூட்டாக இல்லை என்றால் சரிதான். DRT வழக்கு நிலுவையில் இருந்தபோது 2020 மாற்றியுள்ளார்கள். வா.சா.ஆ.9 ஆவணத்திலேயே 12.11.2019 லேயே சேக் முகம்மது இப்ராகிம் பெயருக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் வங்கி மேலாளர் தினகரன் என்பவர் போலியாக ஆவணங்கள் உற்பத்தி செய்து போலி விற்பனை சான்று உற்பத்தி செய்து கிரைய ஆவணமாக பதிவு செய்துள்ளார்.

2. வா.சா.ஆ.7 ஆவணம் 23.07.2019 அன்று பிராது தபசில் சொத்தை ஏல விடுவதாக வங்கியிலிருந்து அறிவிப்பு செய்ததை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வா.சா.ஆ.7 ஆவணம் வங்கியிலிருந்து எனக்கு அனுப்பட்ட ஆவணம் அல்ல தினகரன் என்ற மேலாளர் தனிப்பட்ட முறையில் 16 செண்ட் நிலத்தை விற்பனை செய்வதற்காக அனுப்பிய ஆவணம் ஆகும். வா.சா.ஆ.7 ஆவணத்தில் அதிகாரம் பெற்ற அலுவலர் என்ற பெயரில் தான் அனுப்பட்டுள்ளது என்றால் போலியாக தயாரித்து அனுப்பியுள்ளார். போலியாக தினகரன் என்பவர் தனிப்பட்ட முறையில் வா.சா.ஆ.7 அனுப்பியதால் தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் முதலமைச்சர் தனிப்பிரிவின் மூலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் 2008 ம் ஆண்டு வங்கியிலிருந்து கடன் பெற்றேன். நாளது தேதி வரை நான் அசலோ வட்டியோ செலுத்தவில்லை என்றால் 2011 ம் ஆண்டு

வரை செலுத்தியுள்ளேன். வங்கி கணக்கு எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல வா.சா.ஆ.16 தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.20–ன் படி முழு தொகையையும் நான் செலுத்தவில்லை என்றால் நான் 10 லட்சம் ரூபாய் வங்கியில் செலுத்துவதாக நான் கூறினேன் ஆனால் வங்கியிலிருந்து அவ்வாறு செலுத்த அனுமதிக்கவில்லை. வா.சா.ஆ.10 ஆவணம் நான் தாக்கல் செய்து நீதிபேராணை மனு என்றால் சரிதான். அந்த நீதிபேராணை மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் நான் வங்கியை தொடர்பு கொள்ளும்படி தள்ளுபடி செய்யப்பட்டது Contested and dismissed என்ற குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.11 நீதிபேராணை மனு நான் அந்த மனுவை வாபஸ் பெற்றதால் தள்ளுபடி ஆனது என்றால் வழக்கு நிலுவையில் இருக்கும் போது சேக் முகம்மது இப்ராகிம் என்பவர் பிராது தபசில் சொத்தை கிரையம் பெற்றதால் வேறு வழக்கு தாக்கல் செய்வதற்காக மேற்படி நீதிபேராணை மனுவை வாபஸ் பெற்றேன். அசல் வழக்கை 2021ம் வருடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 19.08.2024 லேயே பிரதிவாதி என்னுடைய சாட்சியை முடித்து வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு வாதுரைக்காக நிலுவையில் இருந்தபோது தான் 09.08.2024, 23.08.2024, 25.08.2024 ஆகிய தேதிகளில் வா.சா.ஆ.12 இணைய தளமூலம் புகார் அளித்தேன் என்றால் சரிதான். 2019 லேயே சேக் முகம்மது இப்ராகிம் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் மோசடியாக கிரையம் பெற்றுள்ளார்.

5. வா.சா.ஆ.13 ஆவணம் 23.09.2024 வாதுரைக்கு வாய்த போட்ட பின்பு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 நான் அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிலேயே அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள 1, 2 நபர்கள் கிரையம் பெற்றுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் மோசடியாக கிரையம் பெற்றுள்ளதாக கூறியுள்ளேன். நாளது தேதி வரை 1,2 நபர்களின் கிரையத்தை

ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிபேராணை மனு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ. 19 ஆவணம் நீதிபேராணை மனு வாபஸ் வாங்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் DRT–யில் வழக்கு தாக்கல் செய்யக்கூறி தள்ளுபடி செய்யப்பட்டது. DRT–யில் வழக்கு நிலுவையில் இல்லை என்றால் மறு ஆய்வு மனு நிலுவையில் உள்ளது.

6. வா.சா.ஆ.15 ஆவணம் வழக்கு கோப்புக்கு எடுப்பதற்காக முந்தைய எண் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் வழக்கு நிலுவையில் உள்ளது. வா.சா.ஆ.16 ஆவணம் வழக்கு கோப்புக்கு எடுப்பதற்காக முந்தைய நிலையில் உள்ளது என்றால் அந்த மனு 27.09.2021 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அந்த மனுவின் செல்லும் தன்மை மட்டும் குறித்து விசாரிக்கப்பட்டு அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. வா.சா.ஆ.17 ஆவணம் வா.சா.ஆ.12 ஆவணத்தில் கண்ட புகார்களை விசாரணை செய்வதற்காக மேற்படி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் என்றால் 3 வெவ்வேறு புகார்கள். 3 வது புகார் முதல் 2 புகார்களுக்கும் நடவடிக்கை எடுப்பத்றகாகத்தான் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, மண்ணை மட்டம் செய்து எனது நிலத்திற்குள் நுழைய முயற்சி செய்ததால் அளிக்கப்பட்ட புகார்.

7. வா.சா.ஆ.18 ஆவணம் நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் எனக்கு எந்த தகவலும் வங்கியிலிருந்து கொடுக்க முடியாது என்று கூறியுள்ளார்கள் என்றால் 03.07.2019 க்கு பின்பு வங்கியால் எனக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்கள். வா.சா.ஆ.20 ஆவணத்தில் 11.11.2014 சுவாதீனம் எடுத்ததாக கூறியுள்ளார்கள் என்றால் சிம்பாலி பொசிசன் எடுத்ததாக கூறியுள்ளார்கள். வா.சா.ஆ.20 ஆவணத்திற்கு எதிராக நான் எந்த தடை உத்தரவும் பெறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.22 மற்றும் வா.சா.ஆ.24 ஆவணம் அஞ்சல் துறை ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.22 மற்றும் வா.சா.ஆ.24 ஆவணத்திற்கும் எந்த பதிலும் வரவில்லை என்றால் எந்த ஆவணத்திற்கு பதில் வந்துள்ளது. பிரதிவாதியை கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டி இந்த ஆவணங்களை தாக்கல் செய்யதுள்ளேன் என்றால் சரியல்ல. வங்கியிலிருந்து 11.11.2019 அன்று சிம்பாலி பொசசன் எடுத்தபின்பு பிராது தபசில் சொத்தில் எந்தவித உரிமையே அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அனுபவத்தை எடுத்த பின்பு நான் பிராது தபசில் சொத்தில் அத்து மீறி நுழைந்து வா.சா.ஆ. 23 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஏதேனும் பரிகாரம் கோர வேண்டும் என்றால் கடன் தீர்ப்பாயத்தில் தான் பரிகாரம் கோர முடியும் என்றும் இந்த நீதிமன்றத்தில் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியை கஷ்ட நஷ்டப்படுத்தவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதியின் நஷ்டயீட்டு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.02.24 14:52:08 +0530

1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி